2018 ஜூன் 6]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருவையாறு தொகுதியைச் சேர்ந்த பூதலூர் ஒரு முக்கியமான இடம். அதில் இரண்டாவது கருத்து யாருக்கும் கிடையாது. எப்படியென்றால், பூதலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பூதலூரைத் தனித் தாலுகாவாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, பூதலூரைத் தனித் தாலுகாவாக ஆக்கியது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் சொன்னேன் அந்தப் பகுதி நெல் விளைகிற பகுதி. தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அந்தப் பதிலைத்தான் மறுபடியும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

ஜவுளிப் பூங்கா

***23786—திரு. பி. வி. பாரதி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பது குறித்த செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்து, மாண்புமிகு முதல்வர், துணை முதல்வர் ஆகியோருக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய நாகப்பட்டினம் மாவட்டத்தில், குறிப்பாக சீர்காழி பகுதி என்பது, விவசாயம் சார்ந்த பகுதியாக இருப்பதாலும், நெல் மட்டுமே விளைவிக்கக்கூடிய ஒரு பகுதியாக இருப்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராக இருப்பதாலும், அவர் கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டும், குறிப்பாக எங்கள் பகுதியில் வட கிழக்குப் பருவமழை பொய்த்து, விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பருத்தி சாகுபடி செய்கிற நிலையில் இருக்கிறார்கள். எங்கள் பகுதியில் இருக்கிற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பருத்தி, தரம் வாய்ந்ததாகவும், சிறப்பான பருத்தியாகவும் இருக்கும் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும்.

முற்பகல் 11-05

ஆக, எங்கள் பகுதிக்கு ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு கனிவோடு பரிசீலனை செய்து, ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று சொன்னால், 25 ஏக்கர் நிலம் வேண்டும். 50 தொழிற்கூடங்கள் வேண்டும். குறைந்தது ரூ.60 கோடியிலிருந்து ரூ.65 கோடி முதலீடு வேண்டும். மத்திய அரசு 40 சதவிகிதம் அல்லது ரூ.40 கோடி நிதியைத் தருகிறது. தமிழக அரசு, மாண்புமிகு அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தலைமையிலான அம்மா அவர்களின் அரசு 9 சதவிகிதம் அல்லது ரூ.9 கோடி நிதியைத் தருகிறது. மீதம் இருக்கிற 51 சதவிகித நிதியை தொழில் முனைவோர்கள்தான்

2018 ஜூன் 6]

முதலீடு செய்யவேண்டும். சொந்தமாகவோ அல்லது வங்கியின் மூலமாகவோ அவர்கள் முதலீடு செய்யவேண்டும். இதற்கு தொழில் முனைவோர்கள் முன்வருவார்களாயின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவை எந்த இடத்தில் வேண்டுமானாலும் அமைக்கத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சீர்காழி பகுதியிலே அரசு நிலம் என்பது பல்வகை பயன்பாட்டிற்கு இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்ற பழமொழிக்கொப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்யவேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியிலே பருத்தி உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். பருத்தி உற்பத்தி என்பது தமிழகத்திலுள்ள நூற்பாலைகளின் தேவையில் 5 சதவிகிதம் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதம் தேவைப்படுகின்ற 95 சதவிகிதம் பருத்தி பிற மாநிலங்களிலிருந்துதான் கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படியே பருத்தி உற்பத்தி அதிகமாக இருக்கும் என்று சொன்னாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு நூற்பாலை வேண்டுமென்று கேள்வி கேட்டிருப்பார்கள் என்று சொன்னால், அவருடைய தொகுதிக்கு ஏதோ தொடர்பு இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம்.*

ஜவுளித் தொழிலுக்கு இது முற்றிலும் சம்பந்தமில்லாத காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்புகொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். நானும் தொழில்முனைவோர்களுக்கான கூட்டத்தைக் கூட்டுவதற்கு

ஏற்பாடு செய்கிறேன். அப்படி ஒரு முயற்சி இருக்குமென்று சொன்னால், அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

138—

கால்நடை மருத்துவமனையைச் சீரமைத்தல்

***5579— டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டில் உள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எரியோட்டில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையம், அரசாணை எண் 181, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 18-9-2017-ன்படி கால்நடை மருந்தகமாக, 10 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்பட்டு, 1-11-2017 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.*